வெற்றியுள்ள வாழ்க்கை

நான் தேவனின் கைவேலைப்பாடு, நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய் உருவாக்கப்பட்டிருக்கிறேன்.[1]

அவருடைய இரத்தத்தின் மூலமாக எனக்குப் பாவ மன்னிப்பு உண்டானதால் நான் மீட்பைப் பெற்றுள்ளேன்.[2] வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரையிடப்பட்டிருக்கிறேன்.[3]

கிறிஸ்து என்னை மெய்யாகவே விடுதலையாக்கியுள்ளார்.[4] அவர் என் அகக்கண்களை (அறிந்து கொள்தலை) ஒளிபெறச் செய்துள்ளதால் அவருடைய அழைப்பினால் உண்டான நம்பிக்கையையும், நான் நினைப்பதற்கும் கேட்டுக்கொள்வதற்கும் அதிகமான அவருடைய ஒப்புயர்வற்ற வல்லமை[5] நிறைந்த பெலனையும் மகிமையின் உரிமைகளையும் நான் அறிந்து கொள்கிறேன்.[6]

பரிசுத்த ஆவியானவர் மூலமாக தேவனுடைய வல்லமையைப் பெற்றுக் கொண்டேன்.[7] இதனால் பிசாசுகளைத் துரத்தவும்,[8] எதிரியின் அனைத்து அதிகாரத்தினையும் மேற்கொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ளேன்.[9]

என்னைப் பெலப்படுத்தும் இயேசு கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றலைப் பயன்படுத்த முடியும்.[10]

அவர் செயல்களிலும் பெரிய செயல்களைச் செய்ய என்னால் இயலும் என விசுவாசிக்கிறேன்.[11]

என்னில் வசிக்கும் இயேசு உலகத்திலுள்ள பிசாசை விடப்பெரியவர்.[12] வாழ்வு தரும் பரிசுத்த ஆவியின் சட்டம் என்னில் செயலாற்றுகிறது.[13] கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே என் பெலன்.[14]

[1] எபேசியர் 2:10
[2] எபேசியர் 1:7
[3] எபேசியர் 1:13
[4] கலாத்தியர் 5:1
[5] எபேசியர் 1:18,19
[6] எபேசியர் 3:10
[7] அப். 1:8
[8] மாற்கு 16:17,18
[9] லூக்கா 10:19
[10] பிலிப்பியர் 4:13
[11] யோவான் 14:12
[12] 1 யோவான் 4:4
[13] ரோமர் 8:2
[14] நெகெ. 8:10

எபேசியர் 2:10
ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

எபேசியர் 1:7
அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.

எபேசியர் 1:13
நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.

கலாத்தியர் 5:1
ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்.

எபேசியர் 1:18,19
தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

எபேசியர் 3:10
உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும்பொருட்டாக,.

அப். 1:8
பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

மாற்கு 16:17,18
விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.

லூக்கா 10:19
இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.

பிலிப்பியர் 4:13
என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.

யோவான் 14:12
மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.

1 யோவான் 4:4
பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.

ரோமர் 8:2
கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.

நெகே. 8:10
பின்னும் அவன் அவர்களை நோக்கி: நீங்கள் போய்க் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள்; இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம்; கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au